சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

எ.சா. 01 திரு. குணத்திலகன் த /பெ திரு. வரதராஜன் , வயது . 69

**எதிரி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி.–**

.10.07.2017, 10.09.2017, 10.10.2017, 10.12.2012, 10.02.2018, 10.05.2018, 10.11.2018 ஆகிய தேதிகள்யிட்ட புகார்தாரரிடம் எதிரி சீட்டு பணம் செலுத்திய பின்பு வழங்கப்பட்ட இரசீது அட்டைகள் அசல் தாக்கல் செய்கிறேன். **(அந்த ஆவணம் புகார்தாரர் தரப்பு ஆட்சோபனை உடன் என்னால் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 11.02.2018 தேதியிட்ட சீட்டு பணம் செலுத்தியதில் ரூ– 13,460/– மட்டுமே பாக்கி என்னு புகார்தாரர் எதிரிக்கு அளித்த ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **(அந்த ஆவணம் புகார்தாரர் தரப்பு ஆட்சோபனை உடன் என்னால் எ.சா.ஆ.02 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னுடைய ஒய்வுதிய அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் **(அந்த ஆவணம் என்னால் எ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 23.07.2022 தேதியிட்ட புகார்தாரரரை எனக்கு அறிமுகம் செய்த தீபக் என்பவரின் இறப்பு சான்றிதல் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் தாக்கல்செய்கிறேன் **(அந்த ஆவணம் என்னால் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எனது ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் **(அந்த ஆவணம் என்னால் எ.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ரயில்வே துறையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன் என்றால் சரிதான். புகார்தாரர் எனக்கு நல்ல பழக்கமான நபர் என்றால் சரிதான். தீபக் என்பவர் மூலம் எனக்கு பழக்கமானார். இந்த வழக்கு காசோலை என்னுடைய தான் என்றால் சரிதான். நான் கொடுத்துள்ள காசோலையில் இணைக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கு என்னுடைய தான் என்றால் சரிதான். நான் என் தேவைக்காக புகார்தாரிடம் பணம் கேட்டேனா என்றால் இல்லை. புகார்தாரர் நடத்தி வந்த சீட்டில் தான் சேர்ந்தேன். புகார்தரார் அலுவலகம் வைத்து சீட்டு நடத்தி வருகிறாரா என்றால் இல்லை ஆனால் அவர் வீட்டில் வைத்து நடத்தி வருகிறார். புகார்தாரரின் முகவரி

தெரியுமா என்றால் ஏலகிரி கிராமத்தில் உள்ளது. ஏலகிரி கிராமமானது மொத்தம் 20 வட்டங்களாக உள்ளன என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.01 ஆவணத்தில் முகவரியோ ஆவணத்தை எழுதியவரின் பெயரோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் புகார்தார் தான் எழுதி என்னிடம் கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ. 01 அட்டையானது கடைகளில் நேரடியாக விற்பனை செய்வார்கள் என்றால் சரிதான். தீபக் என்பவர் என்னுடன் மூன்று நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். அவர் வீட்டு முகவரி தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ. 01 காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த காசோலை என்னுடையதுதான் என்றாலும் அந்த காசோலையை என்னால் மட்டுமே பிறருக்கு கொடுக்க இயலும் என்றாலும் சரிதான். என் பென்ஷன் புத்தகத்தை புகார்தார் வைத்துக் கொண்டுள்ளதாக நான் கூறுவதற்கு காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்துள்ளேன் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ. 02 எந்த தேதியில் எழுதிக் கொடுத்தார் என்றால் 11.2.2019 அன்று புகார்தாரர் கடையில் வைத்து எழுதி கொடுத்தார். ( சாட்சி தான் எழுதி எடுத்து வந்த ஒரு துண்டு சீட்டை பார்த்து தேதியை குறிப்பிட்டார். ) நான் கூறுவது போல் புகார்தாரர் எனக்கு எவ்வித ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால் அவர் எழுதிக் கொடுத்த தேதி எனக்கு நினைவிருக்கும் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரி அல்ல. நான் என்னுடைய தேவைக்காக புகார்தாரிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு பின்பு காசோலை கொடுத்துள்ளேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Sd/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.